## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 15 (LW- 33 ) | நாள் | 21.11.2025 |
| பெயர் | C.T. நாகவள்ளி | தொழில் | காவல் ஆய்வாளர் |
| கணவர் / தந்தை பெயர் | திரு ரா. கணேசமூர்த்தி | கிராமம் | திருச்சிராப்பள்ளி |
| தாலுக்கா | திருச்சிராப்பள்ளி | வயது | 58/2025 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஜெயங்கொண்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த பிப்ரவரி மாதம் 2025 பெரம்பூர் காவல் நிலைய ஆய்வாளராக பணியிலிருந்த போது 14.02.2025 அன்று சுமார் 23.0 மணியளவில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையிலிருந்து வந்த தகவலை பெற்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையிலிருந்து அஜய், த/பெ. கல்யாணகுமார் வயது 19, வடக்கு தெரு, முட்டம் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தை பெற்று பெரம்பூர் காவல் நிலைய குற்ற எண். 57/2025, ச/பி. 296(b), 118(2), 109, 103, 351(3) of BNSன் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அசாஆ 11** ஆகும். மறுநாள் காலை 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்வையிட்டு சாட்சிகள் சிவாஜி, கொலம்பஸ் ஆகியோர் முன்னிலையில் **மாதிரிவரைபடம், பார்வை மகசர்** தயார் செய்தேன். அது முறையே **அசாஆ 12 , 13** ஆகும். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட இரத்தம் தோய்ந்த மண், இரத்தம் தோயாத மண் ஆகியவற்றை சாட்சிகள் கலையரசன், தனலட்சுமி

ஆகியோர் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். அந்த **கைப்பற்றுதல் மகசர் அசாஆ 14** ஆகும். மேற்படி சாட்சிகளிடம் தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் மயிலாடுதுறை அரசு மருத்துவமனை சவக்கிடங்கிலிருந்த இறந்துபோன ஹரிஷ், த/பெ. கல்யாணகுமார் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்து பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அசாஆ 15** ஆகும். இவ்வழக்கில் சம்பவத்தை இடத்தை பார்வையிட்டதலிருந்தும் சாட்சிகளை விசாரித்ததிலும் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் 1– தங்கதுரை, 2– மூவேந்தன், 3– ராஜ்குமார் ஆகியோரை போலிஸ் பாரட்டி சகிதம் தேடிய போது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் 15.02.2025 அன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் பெரம்பூர் காவல் சரகம் அரும்பாக்கத்தில் உள்ள வீரசோழன் ஆற்றுபாலத்திற்கு அருகில் மறைந்திருந்த இந்த வழக்கின் எதிரிகளான தங்கதுரை, மூவேந்தன், ராஜ்குமார் ஆகியோரை காரணம் கூறி கைது செய்தேன். உறவினருக்கு தகவல் தெரிவித்தேன். பிறகு மூவரும் தன்னிச்சயைாக எவ்வித வற்புறுத்தலுமின்றி தனித்தனியாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கலையரசன், தனலட்சுமி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். தங்கதுரை கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னுடன் வந்தால் சம்பவ இடத்தை அடையாளம் காட்டி நான் வீரசோழன் ஆற்று பாலத்திற்கு அருகில் மறைத்து வைத்திருக்கும் கத்தியையும் என் இரத்தக்கறை படிந்த உடைகளையும் எடுத்து ஆஜர் செய்வேன் என்று சொன்னார் அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 16** ஆகும். அதனடிப்படையில் அதே சாட்சிகள் முன்னிலையில் இரத்தக்கறை படிந்த

21/11/2025

கத்தி, இரத்தக்கறை படிந்த கருப்பு நிற பேன்ட், இரத்தக்கறை படிந்த ரோஸ் கலர் முழுக்கை சட்டை ஆகியவற்றை மகசர் மூலம் கைப்பற்றிறேன். அந்த **கைப்பற்றுதல் மகசர் அசாஆ** 17 ஆகும். அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி மூவேந்தன் என்பவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தால் அதில் வீரசோழன் ஆற்று பாலத்திற்கு அருகில் மறைத்து வைத்திருக்கும் கத்தியையும் தன்னுடைய இரத்தக்கறை படிந்த உடைகளையும் ஆஜர் செய்வேன் என்று சொன்னார் அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 18** ஆகும். அதனடிப்படையில் அன்றைய தினமே வீரசோழன் ஆற்று பாலத்திற்கு அருகில் இரத்தக்கறை படிந்த கத்தி இரத்தக்கரை படிந்த வெளிர் நிற ஜீன்ஸ்பேன்ட், இரத்தக்கறை படிந்த சாம்பல் வெள்ளை நிற முழுக்கை சட்டை ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் ஒரு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அசாஆ 19** ஆகும். எதிரி ராஜ்குமார் அதே சாட்சிகள் முன்னிலையில் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் வீரன் சோழன் ஆற்றுபாலத்திற்கு அருகில் மறைத்து வைத்திருக்கும் கத்தியையும் தன்னுடைய இரத்தக்கறை படிந்த உடைகளையும் ஆஜர் செய்வதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அசாஆ 20** ஆகும். அதனடிப்படையில் அன்றைய தினமே வீரன் சோழன் ஆற்றுபாலத்திற்கு அருகில் இரத்தக்கறை படிந்த கத்தி, இரத்தக்கறை படிந்த கருப்பு நிற பேன்ட் இரத்தக்கறை படிந்த வெள்ளை நிற முழுக்கை சட்டை ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் ஒரு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அது **அசாஆ 21** ஆகும். அன்றைய தினமே எதிரிகள்

21/11/2023

மூவரையும் கைது தடயங்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆஜர் செய்து கடலூர் மத்திய சிறையில் ஒப்படைத்தேன். பிறகு மயிலாடுதுறை காவல் கண்காணிப்பாளர் கடிதம் ந.க.எண்12/PROC/SP-CAMP/MLD/2025, dt:16.02.2025 உத்தரவின்படி வழக்கு விசாரணையை செம்பனார்கோவில் காவல் ஆய்வாளர் கருணாகரன் அவர்களிடம் வழக்கு கோப்பினை தொடர்விசாரணைக்காக ஒப்படைத்தேன்.

**6ம் குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எந்த எதிரியும் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் அதனடிப்படையில் எந்த தடய பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. 6ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**1 முதல் 5 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அசாஆ 1 புகாரில் அது எங்கிருந்து பெறப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். எத்தனை மணிக்கு பெறப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். எத்தனை மணிக்கு திரும்ப காவல் நிலையம் வந்தேன் என்ற விவரமும் இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 15.02.2025 அன்று காலை 6.00 மணிக்கு நீதித்துறை நடுவர் பெற்றுக்கொண்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். முதல் விசாரணையில் இரத்தம் படிந்த மண் மற்றும் இரத்தம் படியாத மண் ஆகியவை கலையரன், தனலட்சுமி ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக சொல்லியுள்ளேன். ஆனால் சிவாஜி மற்றும் கொலம்பஸ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றியுள்ளேன். அசாஆ 14 கைப்பற்றுதல் மகசர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றால் சரிதான். ஆனால்

21/11/2025

சம்பவ இடத்தில் இரத்தம் படிந்த மண் மற்றும் இரத்தம் படியாத மண்ணை கைப்பற்றினேன். அசாஆ 17, 19, 21 ஆகிய கைப்பற்றுதல் மகசர்களில் நிலைய குற்ற எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் எந்த இடத்திலும் மின்விளக்குகள் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் சம்பவ இடத்தை சுற்றி எதிரிகளின் வீடோ இறந்தவர்களின் வீடோ இல்லை என்றால் சரிதான். என்னிடம் கொடுக்கப்பட்ட புகாரிலும் நான் விசாரித்த வகையிலும் பைப் கட்டையில் உட்கார்ந்திருந்நதாக சொல்லியுள்ளார். வரைபடத்தில் சம்பவ இடத்தை x போட்டு குறியிட்டுள்ளேன் அந்த இடத்தில் இரத்தக்கறை இல்லை வடக்கு சாலையில் தான் இரத்தக்கறை இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் கொடுக்கப்பட்ட புகாரிலும் நான் விசாரித்த வகையிலும் பாதிகப்பட்டவர்களின் தரப்பில் மூன்று பேரும் எதிரிகளின் தரப்பில் மூன்று பேர் மட்டுமே சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். எதிரிகள் சம்பவ இடத்திற்கு எப்படி வந்தார்கள் என்பதை விசாரிக்கவில்லை. எதிரிகள் மூன்று பேரில் முதல் இரண்டு பேர் ஒரு வகை சாதியை சேர்ந்தவர்கள் என்பதையும் 3ம் ராஜ்குமார் வேறு ஒரு வகையை சேர்ந்தவர் என்று தெரிந்து கொள்ளவில்லை. 3ம் எதிரியுடன் யாரும் பேசக்கூடாது என்று விலக்கி வைத்த விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அவர்களுக்குள் இருந்த சாதி பிரச்சனையை திசை திருப்புவதற்காக எதிகளுக்கு எதிராக பொய்யான புகாரை பெற்று சரிவர விசாரிக்காமல் பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு விசாரணையை தவறாக மேற்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. அசா–1 அஜய் சொன்ன தேதியில் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெறவில்லை என்றால் சரியல்ல.

21/11/2023

21/11/2020

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

21.11.20

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 56/2025

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 16 (LW– 34) | நாள் | 21.11.2025 |
| பெயர் | கருணாகரன் | தொழில் | காவல் ஆய்வாளர் |
| தந்தை பெயர் | சித்ரவேல் | கிராமம் | சிதம்பரம் |
| தாலுக்கா | சிதம்பரம் | வயது | 59 |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது செம்பனார் கோவில் காவல் நிலையத்தில் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.02.2025 அன்று பெரம்பூர் காவல் நிலைய குற்ற எண். 57/2025 வழக்கில் கொலையுண்டு இறந்துபோன ஹரிசக்தி என்ற சக்தி, வயது 23 என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி அன்று காலை 9.15 மணிக்கு மயிலாடுதுறை அரசு மருத்துவமனை சவக்கிடங்கின் முன்பு பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அசாஆ 22** ஆகும். பிறகு மயிலாடுதுறை மாவட்ட கண்காணிப்பாளரின் 16.02.2025 தேதியிட்ட செயல்முறையின் கீழ் வழக்கின் விசாரணை பெரம்பூர் காவல் ஆய்வாளர் நாகவள்ளியிடமிருந்து எனக்க அளிக்கப்பட்டு அவரிடம் வழக்கு கோப்புகளை பெற்று தொடர் விசாரணையை தொடங்கினேன். சாட்சிகள் அஜய், தினேஷ் ஆகியோரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். காயம்பட்ட அஜய் என்பவரின் **விபத்து பதிவேடு அசாஆ 23** ஆகும். அன்றைய தினமே சாட்சி மணிகண்டனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட முனுசாமி, அவரின் மனைவி மஞ்சுளா இருவரையும் எதிரிகளாக சேர்த்து 17.30 மணிக்கு முட்டம் வடக்கு தெருவில் உரிய சட்ட நடைமுறைகளை பின்பற்றி கைது செய்து நிலையம் வந்து பாரா வசம் ஒப்படைத்து பின்னர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் 18.02.2025 அன்று சாட்சிகள் செந்தில்குமார், கரிகாலசோழன், விக்னேஷ் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கின் கலையரசன் மகன் சஞ்சய் என்பவரை வழக்கின் 6வது எதிரியாக சேர்த்து அவரை சட்டநடைமுறைகளை பின்பற்றி கைது செய்து பிறகு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைது செய்த போது சஞ்சய் தானாக முன்வந்து ஒரு வாக்குமூலம் கொடுத்தார். பிறகு நீதிமன்றத்திற்கு சஞ்சயை வழக்கில் சேர்த்து சட்டப்பிரிவுகளை மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். அந்த **சட்டமாறுதலறிக்கை அசாஆ 24** ஆகும். இறந்து போன ஹரிசக்தி என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த காவலர் 628 நவீன்ராஜ் என்பவருக்கு கடவு சீட்டு கொடுக்கப்பட்டு அதன்படி அவர் பிரேத பரிசோதனை முடிந்து உறவினரிடம் பிரேதத்தை ஒப்படைத்து ஒரு தனியறிக்கை கொடுத்தார் அந்த **தனியறிக்கை அசாஆ 25** ஆகும். இறந்து போன ஹரிஷ் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த காவலர் 600 ராகுல்குமார் என்பவருக்கு கடவு சீட்டு கொடுக்கப்பட்டு அதன்படி அவர் பிரேத பரிசோதனை முடிந்து உறவினரிடம் பிரேதத்தை ஒப்படைத்து ஒரு தனியறிக்கை கொடுத்தார் அந்த **தனியறிக்கை அசாஆ 26** ஆகும். பிறகு சாட்சிகள் துர்காதேவி, தீபா, மணிகண்டன், ரமா,

ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் இறந்துபோனவர்களின் உள்ளுறுப்புகளை சேகரம் செய்து தஞ்சாவூர் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பிவிட்டு அறிக்கை பெறப்பட்டது. அந்த **அறிக்கைகள் முறையே அசாஆ 27 மற்றும் 28** ஆகும். அறிக்கை கொடுத்த செந்தில்பாபு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் இறந்துபோனவர்களின் உடலை பிரேத பரிசோதனை செய்து பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கிய மருத்துவர்கள் வினோத், நவீன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட அஜய் என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த மருத்துவர் ரவீந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் துரித முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்தில் ஒப்படைத்த காவலர் சரஸ்வதி என்பவரை விசாரித்தேன். பிரே பரிசோதனைக்கு இறந்தவர் உடலை ஒப்படைத்த காவலர்கள் நவீன்ராஜ், ராகுல் குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு 26.03.2025 அன்று இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 296(b), 118(1), 109, 103, 351(3), 249 of BNS என்பதை 296(b), 109, 351(3), 191(2), 191(3), 103(1), 55, 249(b) BNS என சட்டப்பிரிவுகளை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ 29** ஆகும். என் விசாரணையை முடித்து இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அந்த இறுதியறிக்கைப்படி

**எதிரி –1** மற்றும் 2ன் மீது 191(2),191(3), 296(b), 103(1), 351(3) BNS ன்படியும்

**எதிரி – 3** ராஜ்குமார் மீது 191(2), 191(3), 296(b), 109, 118(1), 351(3) r/w 103(1), 55 BNS, ன்படியும்

**எதிரி – 4** மஞ்சுளா மற்றும் **எதிரி –5** முனுசாமி ஆகியோர் மீது 191(2),49, 296(b) r/w 103(1) r/w 55, 190 of BNS ன்படியும்

**எதிரி –6** சஞ்சய் மீது 191(2)இ 249(2) BNS r/w 109, 103(1) r/w 55, 190 BNS ன்படியும் காவல் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**6ம் குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பில் குறுக்கு விசாரணை**

6ம் எதிரி கொலை செய்தார் என்று அசாஆ 1 புகாரிலும், அசா –1 சாட்சியத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 6ம் எதிரி மற்ற எதிரிகளை ஏற்றிசெல்ல இருசக்கரவாகனத்தை தயார் நிலையில் வைத்திருந்தார் என்று அசாஆ 1 புகாரிலும், அசா –1 சாட்சியத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அசா –2 சாட்சியத்திலும் அதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அசா 3 தன் சாட்சயித்தில் சுபசோழன், ஆதித்யன், ஜெகதீஷ் ஆகியோர் பார்த்தபிறகு எதிரி சஞ்சய் பல்சர் வாகனத்தில் நின்று கொண்டிருந்தார் என்று என் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அசா 5 துர்கா தேவி என் விசாரணையில் 6ம் எதிரியை சம்பவ இடத்தில் பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான்சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் 6ம் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. 6ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வழக்கின் சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் சட்டமாறுதல் அறிக்கையில் 6ம் எதிரியை தொடர்பு படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் 6ம் எதிரி மீது காவல் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 5 குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடத்தை பொறுத்து மகசரோ வரைபடமோ மறுபடியும் தயார் செய்யவில்லை. 4 முதல் 6 வரையான எதிரிகளை வழக்கில் சேர்க்க தனிப்பட்ட நபர்கள் யாரையும் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சம்பவத்தில் எதிரிகள் தரப்பில் மூன்று பேரும் பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் மூன்று பேரும் தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள்தரப்பில் ஐந்து பேர் இருந்தார்கள். ஐந்து பேர் இருந்தார்கள் என்றால் விவரம் முதல் தகவல் அறிக்கயிலும் முதல் விசாணையிலும் சொல்லப்படவில்லை. அசா 1, 2, 3 ஆகியோர் நான் இரண்டாவதாக விசாரிக்கும்போது தான் மற்ற இரண்டு எதிரிகளின் பெயரை சொன்னார்கள். 15.02.2025 அன்று நான் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை. 16.02.2025 அன்று தான் நான் சாட்சிகளை விசாரணை செய்தேன். மீண்டும் 18.02.2025 அன்று தான் மேற்படி 1, 2, 3 சாட்சிகளை விசாரித்தேன். இடைப்பட்ட காலத்தில் சாட்சிகள் மாற்றி சொல்வதற்கான காரணத்தை நான் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. பதட்டத்தில் சொல்லவிடுபட்டதாக சொல்லியுள்ளார்கள். நான் சிவாஜி, கொலம்பஸ், கலையரசன், தனலட்சுமி ஆகியோரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்யவில்லை. 16.02.2025 அன்று தான் இந்த வழக்கின் விசாரணையை என் பொறுப்பில் எடுத்து கொண்டேன். முதல் விசாரணை அதிகாரி மாற்றப்பட்டதற்கான காரணத்தை என் இறுதியறிக்கையில் சொல்லவில்லை. 6 எதிரிகள் மீதும் பொய்யான குற்றச்சாட்டை தாக்கல் செய்யவேண்டுமென்பதற்காக மேல் அதிகாரிகளின் உத்தரவுப்படி வழக்கு என் வசம் ஒப்படைக்கப்பட்டது என்றாலும் அந்த உத்தரவை நிறைவேற்றும் வகையில் எதிரிகள் மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

21.11.25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை